අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

"ඉසුරුපාය", බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
"இசுருபாய", பத்தரமுல்ல, இலங்கை.
"Isurupaya", Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. ED/01/16/04/02/02

ඔබේ අංකය / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2025.06. 09

அனைத்து மாகாண கல்வி பணிப்பாளர்களுக்கும்,

**பாடசாலை வளாகங்களில் டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்களைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல்**

பருவ மழைக்காலம் தொடங்கியதோடு நாடு முழுவதும் டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்கள் பரவும் அபாயம் அதிகமாக உள்ளது என்பதோடு, மே 31, 2025 வரை நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பதிவான டெங்கு நோயாளிகளிடையே அதிக சதவீதம் 5 முதல் 19 வயதுக்குட்பட்ட பாடசாலை வயது பிள்ளைகளாகும் என்பதை சுகாதார பிரிவு மூலம் அறியத்தந்துள்ளது.

02. எனவே, பாடசாலைகளையொட்டிய சூழலை நுளம்புகள் இன்றியதாக பாதுகாப்பாக பேண வேண்டியது தொடர்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட 2010/22 மற்றும் 30/2017 சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக, இதில் குறிப்பிட்டுள்ள பின்வரும் செயன்முறைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் வெளியிடப்படுகின்றன என்பதோடு மாணவர்கள் மற்றும் கல்வி / கல்விசாரா ஊழியர்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்காக பின்வரும் அறிவுறுத்தல் வழிமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

i. அனைத்து பாடசாலை வளாகங்களையும் நுளம்புகள் பெருக்கம் இல்லாமல் பேண வேண்டி பாடசாலை கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பாடசாலையினால் பொருத்தமான உள்ளக வேலைத்திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்தல்

ii. பாடசாலை வளாகத்தை சுத்தம் செய்யும் போது அடையாளம் காணப்பட்ட ஆபத்தான இடங்களை சுத்தம் செய்வதற்கும் உதவி தேவைப்படும் பிற நடவடிக்கைகளுக்கும் பிரதேசத்தின் உள்;ராட்சி நிறுவனங்கள், சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் போன்றவற்றின் உத்தியோகத்தவர்களின் உதவியைப் பெறுங்கள்.

iii. பாடசாலை சுகாதார மேம்பாட்டுக் குழுக்கள் மற்றும் டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக்களை முனைப்பாக செயல்படுத்தி, தூய்மை செயற்பாடுகளுக்கு துப்புரவுப் பணியாளர்கள; / பாடசாலை ஊழியர்கள் / பூந்தோட்டத் தொழிலாளர்கள் போன்ற கல்விசாரா ஊழியர்களுக்கு துப்புரவுப் பணிகளுக்கு பொறுப்புகளை வழங்குதல். மேலதிகமாக, இதற்காக பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் மற்றும் பெற்றோர்களிடமிருந்தும் ஒத்துழைப்பைப் பெறுதல்.

iv. மாணவர்களையும் பணிக் குழுவினரையும் பிளாஸ்டிக்/பாலிதீன் போன்ற மக்காத கழிவுகளை பாடசாலைக்குள் கொண்டு வர வேண்டாம் என்று அறியத்தருதல் மற்றும் பாடசாலையில் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகளை மீள்சுழற்சி செய்து முறையாக அப்புறப்படுத்துவதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்

v. பாடசாலைகளில் வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பின் மூலம் அடையாளம் காணப்பட்ட் அகற்ற வேண்டிய /அழிக்க வேண்டிய/உடைந்த பொருட்களை மிக விரைவாகவும் முறையாகவும அகற்ற/ அழிக்க நடவடிக்கை எடுத்தல்.

vi. பாடசாலையின் சுகாதார மேம்பாட்டுக் குழுவை கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 02/2019 இன் படி முனைப்பாக பேணி வருதல் மற்றும் குழுவைப் புதுப்பித்தல்

vii. சுகாதார மேம்பாட்டுக் குழு கூட்டங்களை தொடர்ந்து உரியவாறு நடத்துவதன் மூலம் பாடசாலையின் பாடசாலை சமூகத்தின் சுகாதாரம், துப்பரவு மற்றும் டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்களின் பரவலைக் கட்டுப்படுத்துவது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்

viii. பாடசாலை வளாகத்தில் பாதி கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள், கூரை இல்லாத ஸ்லாப்புகள் போன்ற தண்ணீர் தேங்கும் இடங்கள் குறித்து அடிக்கடி தொடர்ந்து கவனம் செலுத்தி, தாமதமின்றி தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்/

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk
moesecretaryoffice@gmail.com

ix. அனைத்து மாணவர்களுக்கும் டெங்கு/சிக்குன்குனியா நோய் குறித்து விசேட விழிப்புணர்வு ஏற்படுத்தல் மற்றும் பாடசாலை மட்டத்தில் தங்கள் வீடுகளைச் சுற்றியுள்ள சூழலை டெங்கு நுளம்புகள் இல்லாமல் பாதுகாப்பாக வைத்திருக்க ஊக்குவிக்கும் திட்டங்களை செயல்படுத்தல்.

x. பாடசாலை நேரங்களில் நுளம்பு கடிப்பதை இழிவளவாக்கும் வகையில் நுளம்பு விரட்டியை பூசுதல் மற்றும கைகள் மற்றும் கால்களை மறைக்க பொருத்தமான ஆடைகளை அணிய வேண்டியதன் அவசியத்தையும் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல்.

03. டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய் பரப்பும் நுளம்புகள் பெருகும் இடங்களை அடையாளம் காண அடிக்கடி கள பரிசோதிப்பு மேற்கொள்ளப்படுவதால் பாடசாலை வளாகத்தில் அத்தகைய இடங்கள் அடையாளம் காணப்பட்டால், அதிபர் தனிப்பட்ட முறையில் பொறுப்பாவார் என்றும் சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் வலியுறுத்தப்படுகிறது.

04. மாகாணத்தில் உள்ள தேசியப் பாடசாலைகள் உட்பட அனைத்து அரச மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் அதிபர்கள், பிரிவேனாக்களின் தலைவர்கள், தேசிய கல்வியியற் கல்லூரிகளின் பீடாதிபதிகள் மற்றும் மாகாணத்தில் உள்ள பிற கல்வி நிலையங்கள் மற்றும் அலுவலகங்களின் தலைவர்களுக்குத் தெரிவிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மேலும் கேட்டுக்கொள்கிறேன்.

05. தேசிய மற்றும் காலத்தின் தேவையாக இருக்கும் இந்தப் பணியை வெற்றியடையச் செய்வதில் உங்கள் ஒத்துழைப்பை நான் மிகவும் வரவேற்கின்றேன்.

நாலக கலுவெவ

செயலாளர்

பிரதிகள் -

01. செயலாளர், சுகாதார அமைச்சு
02. பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி)
03. கல்விப் பணிப்பாளர் (தேசியப் பாடசாலைகள்), கல்வி அமைச்சு
04. அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
05. பணிப்பாளர், தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு

(01–05) தயை. அறிதல் பொருட்டு

06. மாகாண சுகாதார அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அதிகாரி - தயை. உ.ந